# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.
# SESSIONS CASE. NO.161/2019

**14.07.2022 - அ.சா. 2 சத்தியராஜ் மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எம்.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். எங்களுக்கு கிராமத்தில் வடக்கிலும், தெற்கிலும் இரண்டு இடத்தில் நிலங்கள் உள்ளது. அதற்கு இடையே 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். இரண்டிலும் கிணறு மற்றும் பம்புசெட் உள்ளது. நான் மருத்துவமனையில் சேர்ந்த பிறகு சுமார் 1/2 மணி நேரத்தில் போலீசார் அங்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள் நான் நடந்ததை சொன்னேன் அவர்கள் எழுதிக் கொண்டார்கள். அதை என்னிடம் படித்துக் காட்டி புகார் வாக்குமூலம் என்றும், அதில் நானும் கையெழுத்து போட்டேன். என் அப்பாவிற்கு காயம் ஏதும் படவில்லை. மருத்துவமனையில் என் டாக்டர் விசாரித்த போது என்னை ஒரு நபர் தாக்கியதாக கூறினேன். சு. வாளவெட்டியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றோம், எனக்கும் என் பாட்டிக்கும் முதலுதவி செய்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு போகும் படி கூறி அனுப்பிவிட்டனர். அங்கு இருந்த மருத்துவர் எங்கள் யார் தாக்கியது, என்ன நடந்தது என்று கேட்டு எழுதிக் கொண்டார்கள். எங்கள் ஊரில் இருந்து சு. வாளவெட்டி வரை இருசக்கர வாகனத்தில் வந்தோம். பிறகு சு. வாளவெட்டியில் இருந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் வந்தோம். சாட்சிகள் வாசுதேவன், வரதராஜ், குப்பன், பழனி, ராமகிருஷ்ணன், கார்த்தி ஆகியோர் எங்களது உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் வாய்க்கால் தகராறு உள்ளது. எங்களுக்கும் எதிரிகளுக்கும் அடுத்தடுத்த நிலம் குறுக்கே வரப்பு உள்ளது. வாய்க்கால் தகராறுக்கு சிவில் வழக்கு எதுவும் போடவில்லை. வாய்பேச்சிலேயே முடிந்து விட்டது. கிணறுமேடு எங்களுக்கும், எதிரிகளுக்கு பொதுவான இடம் என்றால் சரிதான். எதிரிகள் தான் மரத்தை வெட்டிக்கொண்டு இருந்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை, ஆள் வைத்து வெட்டியதாக சொன்னேன். சுமார் 4 ல் இருந்து 5 பேர் இருப்பார்கள். மரம் வெட்ட வந்தவர்கள் யார் என்றும், எந்த ஊர் என்றும், பேர் என்ன என்றும் தெரியாது. நான் எதேர்ச்சையாக எங்கள் நிலத்திற்கு போகும்போது அவர்கள் மரத்தை வெட்டிக்கொண்டு இருப்பதை பார்த்துவிட்டு என் வீட்டிற்கு வந்து என் அப்பா மற்றும் பாட்டியை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். எங்கள் வீட்டிற்கும் வடக்கில் உள்ள நிலத்திற்கும் இடையே 1 கி.மீ. தூரம் இருக்கும், எங்கள் வீட்டிற்கும் தெற்கில் உள்ள நிலத்திற்கும் இடையே 1/2 கி.மீ தூரம் இருக்கும். எதுவாக இருந்தாலும், பேசிக்கொள்ளலாம் என்று எதிரிகளிடம் சொன்னதற்கு நாங்கள் அப்படி தான் வெட்டுவோம் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் சொல்லியும் எதிரிகள் கேட்காமல் வெட்டிக்கொண்டு இருந்ததால் என் பாட்டி தடுக்கப் போனார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராஜசேகர் என் பாட்டியின் நடு மண்டையில் அடித்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2, 3 எதிரிகள் என் பாட்டியை மிரட்டினார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. குப்பன் தடுக்கவந்ததாக என்னுடைய போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தடியை கொண்டு மிரட்டியதால் அவர்கள் பயந்து ஒதுங்கிக்கொண்டார்கள் என்ற விவரத்தையும், என் பாட்டி மயங்கி விழுந்து விட்டார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கூச்சல் போடவே அக்கம் பக்கத்தில் இருந்து வந்ததால் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்ற விவரத்தை

போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வீட்டு விசேஷத்திற்கு எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து நாங்கள் போவதில்லை. என் பாட்டி மட்டும் போய் வருவார்கள். சம்பவம் சுமார் 1/2 மணி நேரம் நடந்தது. அக்கம் பக்கம் நிலத்தில் வேலை செய்தவர்கள் சம்பவத்தை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அக்கம் பக்கத்தில் வேலை செய்தவர்கள் சுமார் 20 - 30 பேர் இருப்பார்களா என்றால் இல்லை. நாங்கள் அண்ணன் தம்பிகள் மூவர் என்பதால் ஊரில் யார் என்ன சொன்னாலும் அவர்களை அடித்து விடுவோம் என்றால் சரியல்ல. அவ்வாறு ஊரில் நிறைய பேரிடம் நாங்கள் முரட்டுதனமாக நடந்து கொள்வதால் நிறைய பேருக்கு எங்கள் மீது வருத்தம் உண்டு என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொல்லியது போது எதிரிகள் யாரும் எங்களை திட்டவோ, அடிக்கவோ, மிரட்டவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டிக்கு சம்பவ இடத்திலேயே மயக்கம் தெளிந்து விட்டது. எங்கள் மீது நிறைய பேருக்கு விரோதம் இருந்ததால் அதில் யாரோ தான் அன்றைய தினம் என்னையும் என் பாட்டியையும் தாக்கி விட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையே உள்ள பழைய பகையை தீர்த்துக்கொள்ள சம்பவத்தை சாதகமாக்கிக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கொம்புகளில், பெரிய கொம்பால் தான் என்னை அடித்தார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சத்தியராஜ்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.